**கரூர் மாவட்டசட்டப்பணிகள்ஆணைக்குழு**
**பழைய நீதிமன்ற வளாகம், 5ரோடு, கரூர்.**

*************

<u>செய்தி குறிப்பு</u>

மாண்புமிகு உச்சநீதிமன்ற உத்தரவின்படி மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் வழிகாட்டுதல்படி, மாண்புமிகு உச்ச நீதிமன்ற வழக்குகளுக்கான Special Lok Adalat எனப்படும் சிறப்பு மக்கள் நீதிமன்றம் வரும் 29.07.2024 முதல் 03.08.2024 வரை நடைப்பெற உள்ளது. இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துகொள்ளக் கூடிய அடையாளம் காணப்பட்ட வழக்குகளின் விபரம் கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு உள்ளது.

எனவே, பொதுமக்கள் மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தில் நடைபெறும் சிறப்பு மக்கள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துகொள்ள அடையாளம் காணப்பட்ட தங்களது வழக்கினை சமரச முறையில் தீர்வு காணும் பொருட்டு கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் சிறப்பு முன்அமர்வு வரும் 24.06.2024 முதல் ஏற்படுத்தப்பட்டு உள்ளது.

மேலும், இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் முன்பாக முடித்துக் கொள்ளும் வழக்குகளுக்கு மேல் முறையீடு கிடையாது. மேலும், இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் மூலம் முடித்துக் கொள்ளப்படும் வழக்குகளுக்கு செலுத்தப்படும் நீதிமன்ற கட்டணம் முழுமையாக திருப்பித்தர வாய்ப்பு உள்ளது.

எனவே, வழக்காடிகள் மற்றும் பொதுமக்கள் இந்த நல்வாய்ப்பினை சிறப்பாக பயன்படுத்தி தங்களது வழக்குகளுக்கு தீர்வினை பெற்றுக்கொள்ளுமாறு கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேலும், இந்த சிறப்பு மக்கள் நீதிமன்றம் குறித்து பொதுமக்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின் கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவினையோ அல்லது அருகாமையில் உள்ள குளித்தலை, கிருஷ்ணராயபுரம் மற்றும் அரவக்குறிச்சி வட்ட சட்டப்பணிகள் குழுவினை நேரிலோ அல்லது 04324-296570 என்ற கரூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தொலைபேசி வழியாகவோ அல்லது karurdlsa@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

Sd/--
(R.SHANMUGASUNDARAM)
தலைவர் /மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
கரூர்.